1975 நவம்பர் 4]

முன்பே விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இந்தக் குடிலுக்கு அண்மையில் உள்ள அரசுப் புறம்போக்கு நிலத்தை கையகப் படுத்திக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : பெரியார் குடிலுக்கு அங்கீகாரம் அளிக்கப்படாததற்குக் காரணம் என்ன என்று கேட்டிருக்கிறார்கள். இப்போது இடவசதி அளிக்கப்படுமா என்று உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். பொதுவாக கல்விச் சட்டப்படி இன்றையதினம் அனாதை இல்லங்கள் என்ற பெயரால் நடைபெறுகிற இல்லங்கள் ஒரு ஆண்டு வரை முறையாக நடத்தப் பட்டு கல்வித் துறையைச் சார்ந்த அதிகாரிகளால் பரிந்துரை செய்யப்படுமானால் அரசுத்துறை மூலம் முறையான சலுகைகளை, நிதி ஆதாரங்களைப் பெற இப்போதிருக்கிற கல்விச் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல் அவர்கள் கோருகிற நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட வருவாய்த் துறை பரிந்துரை செய்தால் அதற்கு ஆவன செய்யப்படும்.

திரு. செ. அரங்கநாயகம் : மூலக் கேள்வியில் அனாதை இல்லம் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் உறுப்பினர் பழனிசாமி அவர்கள் கேட்டபோது பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்புவதற் காக என்று கேட்டார்கள். பெரியார் குடில் என்ன பணியைச் செய்து கொண்டிருக்கிறது என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : இந்தக் குடிலுக்கு அங்கீகாரம் அளிக்கப்படுவதற்குள்ள பரிந்துரைகளை கல்வித் துறையைச் சார்ந்தவர்கள் அனுப்பியிருக்கிறார்கள். 1976-77-ல் இது முறையாக அங்கீகாரம் பெற இருக்கிறது. அதற்குப் பிறகு தான் அதன் நடைமுறைகளைப்பற்றி உறுப்பினர் அவர்களுக்கு விவரம் அளிக்க முடியும்.

சுகாதார ஊழியர்களுக்கு சைக்கிள் அலவன்ஸ்.

***182 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

ஊராட்சி மன்றங்கள் பேரூராட்சிகளில் பணியாற்றும் சுகாதார ஊழியர்களுக்கு சைக்கிள் அலவன்ஸ் அளிக்க அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சுகாதார மேஸ்திரி களுக்கும், சுகாதார ஆய்வாளர்களுக்கும் சைக்கிள்

அலவன்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது. சுகாதார துப்புரவாளர்கள் சில தெருக்களில் மட்டும் பணி புரிவதால் சைக்கிள் அலவன்ஸ் வழங்கப்படவில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : சைக்கிள் இருக்கிறவர்களுக்கு இந்த சைக்கிள் அலவன்ஸ் கொடுக்கப்படுகிறதா ? சைக்கிள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் எல்லோருக்கும் சைக்கிள் அலவன்ஸ் உண்டா ? சைக்கிள் வாங்க முடியாதவர்களுக்குக் கடன் கொடுத்து சைக்கிள் வாங்கித் தர ஏதாவது வசதி செய்யப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சைக்கிளில் போய் மேற்பார்வை செய்கிறவர்களுக்கு இந்த அலவன்ஸ் தரப்படுகிறது. இதற்கும் சைக்கிள் வாங்குவதற்கும் சம்பந்தம் இல்லை.

வந்தவாசி ஒன்றியத்தில் நன்கொடை வசூல்.

* 183 வினா—**திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1974-75-ம் ஆண்டில் வந்தவாசி (வ.ஆ.) ஊராட்சி ஒன்றியம், அதன் ஊராட்சித் தலைவர்களிடமிருந்து நன்கொடைகள் வசூலித்து உள்ளதா ?

(இ) ஆம் எனில், எதற்காக எவ்வளவு தொகை வசூலிக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) குடும்பக் கட்டுப்பாடு இயக்கத்திற்காக, வந்தவாசி ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்த 58 ஊராட்சித் தலைவர்களிடமிருந்து அவர்கள் அலுவல் பொறுப்பில் **(Official capacity)** ஊராட்சி ஒன்றுக்கு ரூ. 100 வீதம் மொத்தம் ரூ. 5,800 மாவட்ட ஆட்சியரால் வசூலிக்கப்பட்டது.

அரிசன நலப் பள்ளிகளில் பணியாற்றும் இளநிலை ஆசிரியர்கள்.

* 184 வினா—**திரு. சீ. க. வடிவேலு :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரிசன நலத்துறை தொடக்கப்பள்ளிகளில் ஹையர்கிரேடு ஆசிரியர்களாகப் பணியாற்றும் செகண்டரி கிரேடு படித்த ஆசிரியர்களுக்கு செகண்டரி கிரேடு பதவிகள் கொடுக்கும் திட்டம் ஏதேனும் ஆய்விலுள்ளதா ?